**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்ஷா, B.B.A.,L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 15 ஆம் நாள் திங்கட்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 40/2018**
**CNR.No.TNTT11-000292-2018**
*********

| | | |
|---|---|---|
| **1.** | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | <u>**அரசுக்காக,**</u><br>காவல் உதவி ஆய்வாளர்,<br>நாசரேத் காவல் நிலையம்,<br>(குற்ற எண். 19/2018) |
| **2.** | எதிரியின் பெயர் (Name) | திரு. ஆரோன் இம்மானுவேல்,<br>வயது 39,<br>த/பெ. சார்லஸ் கோயில் பிள்ளை,<br>கோயில்தெரு, கட்டாரிமங்கலம்.<br><br>கூலி |
| **3.** | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| **4.** | எதிரியின் தொழில் (Occupation) | |
| **5.** | எதிரியின் முகவரி (Residence) | |
| **6.** | எதிரியின் வயது (Age) | |
| **7.** | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 01.02.2018 |
| **8.** | புகார் தேதி (Complaint) | 02.02.2018 |
| **9.** | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | 02.02.2018 |
| **10.** | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | 13.02.2018 |
| **11.** | Commitment | ----- |
| **12.** | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 20.08.2024 |
| **13.** | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 08.06.2026 |
| **14.** | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| **15.** | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or Finding on Accused) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார் |
| **16.** | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) இன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of | 26.05.2026 |


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.15 17:26:15 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | accused U/s 313(1)(b) | | | |
| **17.** | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses) | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | PW1 | 02.12.2025 | 02.12.2025 |
| | | PW2 | 24.03.2026 | 24.03.2026 |
| | | PW3 | 24.03.2026 | --- |
| | | PW4 | 17.04.2026 | --- |
| | | PW5 | 12.05.2026 | 12.05.2026 |
| **18.** | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of Cognizance) | 27.04.2018 | | |

இவ்வழக்கானது என் முன்பு 08.06.2026 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. வில்லின் பெலிக்ஸ் அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II திருமதி.பிரீத்தி ராணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**1. குற்றச்சாட்டு :-**

**1.1.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான விக்டோரியா அன்பு என்பவர் நாசரேத் சந்தி அருகே தள்ளு வண்டியில் இட்லி கடை வைத்து தொழில் செய்து வந்தார். கடந்த 01.02.2018 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் எதிரி புகார்தாரரிடம் கடனுக்கு இட்லி கேட்டார். அதற்கு புகார்தாரர் உங்களுக்கு ஏற்கனவே கடன் இருக்கிறது பணத்தை தந்து விட்டு சாப்பிடுங்கள் என்று கூறினார். அதற்கு எதிரி புகார்தாரரைப் பார்த்து "ஏய் தேவடியா முண்ட நான் கடனுக்கு இட்லி கேட்டால் தரமுடியாதா உன்னை அடிச்சா எவன் கேட்பான்" என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசி, புகார்தாரரைப் பார்த்து இட்லி கடையை காலி செய்யாவிட்டால் உன்னையும் இட்லி கடையையும் நான் காலி செய்து விடுவேன் என மிரட்டல் விடுத்து பொதுஇடத்தில் வைத்து புகார்தாரருக்கு மிகுந்த அவமானத்தையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார்.

**1.2.** எனவே, எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) உ/இ பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என்று அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. குு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல் :-**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-இன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை :-**

3.1. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்.

3.2. இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.15 17:26:20 +0530

போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. <u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>**

பட்டியல் சாட்சியில் இருந்து ஐந்து நபர்கள் அ.சா.1 முதல் அ.சா.5 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு :-</u>**

**5.1.** அ.சா.1 – விக்டோரியா அன்பு அவருடைய சாட்சியத்தில், அவர் தற்போது கோயம்புத்தூரில் குடியிருந்து வருவதாகவும், வழக்கு சம்பவ காலத்தில் நாசரேத்தில் இட்லி கடை வைத்து நடத்தி வந்ததாகவும், எதிரி அவருடைய உறவினர் என்றும், எதிரி வழக்கமாக அவருடைய கடையில் இட்லி சாப்பிடுவதற்கு சில நேரம் பணம் கொடுப்பார், சில நேரம் கடன் வைத்துவிட்டு செல்வதாகவும், கடந்த 01.02.2018 ஆம் தேதி இரவு 09.00 மணியளவில் அ.சா.1 கடையில் இருந்தபோது எதிரி கடைக்கு வந்து சாப்பிடுவதற்கு இட்லி கேட்டதாகவும், அ.சா.1 எதிரிக்கு இட்லி எடுத்துக் கொடுத்ததாகவும், எதிரியுடன் 4 நபர்கள் வந்து இட்லி சாப்பிட்டதாகவும், அ.சா.1 சாப்பிட்டதற்கு பணம் கேட்டபோது, எதிரி அ.சா.1ஐ பார்த்து "தேவடியா மகளே" என்று ஆபாசமாக பேசி அ.சா.1 இன் கன்னத்தில் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாகவும், மேலும் கொல்லாமல் விடமாட்டேன், கடையை காலி செய்யாமல் விட மாட்டேன் என்றும் கூறியதாகவும், இந்த சம்பவத்தைப் பார்த்து அருகில் இருந்த கடைக்காரர்கள் சத்தம் போட்டதால் எதிரி சென்றுவிட்டதாகவும், எதிரி அவரை ஆபாசமாக பேசியதால் அவருக்கு மன உளைச்சல் ஏற்பட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

**5.2.** அ.சா.2 - மகேஷின் சாட்சியத்தை ஆராயும்போது, எதிரியை தெரியாது என்றும், கடந்த 01.02.2018 அன்று இரவு சுமார் 9-9.15 மணியளவில் அ.சா.1 வாடகைக்கு ஆட்டோ வேண்டும் என்று அவரை அழைத்ததாகவும், அவர் அன்றைய தினம் அ.சா.1 ஐ நாசரேத் காவல் நிலையம் அழைத்து சென்றதாகவும், வேறு வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார்.

**5.3.** அ.சா.3 - ராமன், அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியாது என்றும், வழக்கு சம்பவம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார்.

**5.4.** அ.சா.4 - மாயாண்டி, அவருடைய சாட்சியத்தில், எதிரியை தெரியாது என்றும், அவரிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரிலுள்ள கையெழுத்து அவருடையது தான் என்றும், வழக்கு சம்பவம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார்.

**5.5.** அ.சா.5 - திரு.துரை/புலன்விசாரணை அதிகாரி, அவருடைய சாட்சியத்தில், 02.02.2018 ஆம் தேதி காலை 9 மணிக்கு பெண் தலைமைக்காவலர் ஜெயந்தி என்பவரிடம் விக்டோரியா அன்பு எதிரி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார்மனு (அ.சா.ஆ.1) கொடுத்தார். அந்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.19/18, இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார். 02.02.2018 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு.துரை சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.15 17:26:24 +0530

சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகளான மகேஷ், மீரான், ராமன், மாயாண்டி, கொம்பையா, புகார் கொடுத்த விக்டோரியா அன்பு ஆகியோர்களை விசாரணை செய்தும் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பெண் தலைமைக்காவலர் ஜெயந்தி என்பவரை விசாரித்தும் வாக்குமூலம் பதிவு செய்தார்.

**5.6.** புலன்விசாரணை அதிகாரியின் புலன் விசாரணையில் இருந்து சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் 02.02.2018 ஆம் தேதி எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றங்களுக்கு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை</u> :-**

6.1. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

6.2. மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் உண்டு என்று கூறிய போதிலும் எந்தவொரு சாட்சியையும் முன்னிலைப்படுத்தவில்லை.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :-**

எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :-**

8.1. இவ்வழக்கின் வழக்கு சம்பவத்தை நிரூபிக்க மொத்தம் 8 நபர்கள் குற்ற இறுதியறிக்கையில் சாட்சிகளாக பட்டியலிடப்பட்டுள்ளனர். புகார்தாரரும் பாதிக்கப்பட்ட நபருமான விக்டோரியா அன்பு அ.சா.1 ஆகவும், கண்ணுற்ற சாட்சிகளான மகேஷ் அ.சா.2 ஆகவும், ராமன் அ.சா.3 ஆகவும், பார்வைமகஜர் சாட்சியான மாயாண்டி அ.சா.4 ஆகவும், புலன்விசாரணை அதிகாரி அ.சா.5 ஆகவும் அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். கண்ணுற்ற சாட்சியான ப.சா.3 மீரான், பார்வைமகஜர் சாட்சியான ப.சா.6 கொம்பையா மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த ப.சா.7 திருமதி. ஜெயந்தி ஆகியோர்கள் அரசு தரப்பில் சாட்சிகளாக விசாரணை செய்யப்படவில்லை.

**இ.த.ச பிரிவு 294(b)**

**மற்றும்**

**பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம்**

**8.2.** இவ்வழக்கில் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட அ.சா.ஆ–.1 புகார்மனுவினை பரிசீலனை செய்யும்போது, புகார்தாரர் நாசரேத் சந்தியில் இட்லி கடை வைத்து தொழில் செய்து வருவதாகவும், எதிரி அடிக்கடை புகார்தாரர் கடையில் பணம் கொடுக்காமல் இட்லி சாப்பிட்டு வந்ததாகவும், கடந்த 01.02.2018 ஆம் தேதி இரவு 9.00 மணியளவில் எதிரி புகார்தாரரின் கடைக்கு வந்து இட்லி கேட்டதற்கு புகார்தாரர் ஏற்கனவே உங்களுக்கு கடன் இருக்கிறது பணத்தை தந்துவிட்டு சாப்பிடுங்கள் என்று புகார்தாரர் கூறியதாகவும், உடனே எதிரி புகார்தாரரைப் பார்த்து ஏய் தேவடியா முண்ட நான் கடனுக்கு இட்லி கேட்டால் தரமுடியாதா உன்னை அடிச்சா எவன் கேட்பான் என்று ஆபாசமான வார்த்தைகளால் பேசி, பெண் என்றும் பாராமல் பிடித்து கீழே தள்ளி, பொது இடத்தில் அவமானப்படுத்தி இட்லி கடையை காலி செய்யாவிட்டால் உன்னையும் இட்லி கடையையும் நான் காலி செய்து


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.15 17:26:29 +0530

விடுவேன் என்று மிரட்டல் விடுத்ததாகவும், அப்போது பக்கத்தில் இருந்த ஆட்டோகாரர் மகேஷ் மற்றும் ரசீதா மளிகை கடைக்காரர் எதிரியை சத்தம் போடவும் எதிரி அங்கிருந்து ஓடிவிட்டதாக புகார்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறாக, புகார்மனுவினை பரிசீலனை செய்யும்போது, வழக்கு சம்பவமானது நாசரேத் சந்தியிலுள்ள இட்லி கடையில் வைத்து நடைபெற்றுள்ளது புலப்படுகிறது.

**8.3.** புகார்தாரரான விக்டோரியா அன்பு அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 இன் சாட்சியத்தை ஆராயும்போது, வழக்கு சம்பவ தினத்தன்று அ.சா.1 இன் கடையில் வைத்து வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சாட்சியமளித்துள்ளார். கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மகேஷ் மற்றும் அ.சா.3 ராமன் ஆகியோர்கள் அவர்களுடைய சாட்சியத்தில், வழக்கு சம்பவ இடம் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 மாயாண்டி அவருடைய சாட்சியத்தில், அவரிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரிலுள்ள கையெழுத்து அவருடையதல்ல என்றும், வழக்கு சம்பவம் குறித்து அவருக்கு எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார். இவ்வாறாக, அ.சா.1 இன் சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் மற்ற சாட்சிகள் யாரும் வழக்கு சம்பவ இடம் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. இவ்வாறாக, அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, வழக்கு சம்பவம் அரசு தரப்பில் குறிப்பிட்ட படி குறிப்பிட்ட இடத்தில் தான் நடைபெற்றது என்பதனை அரசு தரப்பு உரிய சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**8.4.** அ.சா.1 இன் சாட்சியத்தை ஆராயும்போது, அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், வழக்கு சம்பவ தினத்தன்று எதிரி அவரை ஆபாசமான வார்த்தைகளால் ஏசியதாகவும், அதனால் அவருக்கு மனஉளைச்சல் ஏற்பட்டதாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 இன் சாட்சியத்திற்கு முரண்பாடாக அவர் தாக்கல் செய்த புகார்மனுவில் வழக்கு சம்பவத்தை பார்த்து பக்கத்தில் நின்று கொண்டிருந்த ஆட்டோகாரர் மகேஷ் மற்றும் ரசீதா மளிகை கடைக்காரர் சத்தம் போட்டதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவருடைய சாட்சியத்தில், வழக்கு சம்பவத்தை பார்த்து அருகில் இருந்த கடைக்காரர்கள் சத்தம் போட்டதாக மட்டுமே சாட்சியமளித்துள்ளார். அந்த நபர்கள் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை.

**8.5.** கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மகேஷ் மற்றும் அ.சா.3 ராமன் ஆகியோர்களின் சாட்சியத்தை ஆராயும்போது, இருவரும் அவர்களுடைய சாட்சியத்தில், வழக்கு சம்பவம் குறித்து அவர்களுக்கு எதுவும் தெரியாது என சாட்சியமளித்துள்ளார்கள். இவ்வாறாக, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3, அ.சா.1 இன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை என்பது புலப்படுகிறது. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான ப.சா.3 மீரான் கடந்த 17.05.2021 ஆம் தேதியன்று இறந்துவிட்டதாக அவருடைய இறப்பு சான்றிதழ் நகல் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு அவர் சாட்சியாக விசாரணை செய்யப்படவில்லை. மேலும், அ.சா.1 தான் தாக்கல் செய்த புகார்மனுவிற்கு முரண்பாடாக அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், எதிரி அவரை கன்னத்தில் கையால் அடித்து கீழே தள்ளிவிட்டதாக சாட்சியமளித்துள்ளார்.

**8.6.** இவ்வாறாக, அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, வழக்கு சம்பவம் குறிப்பிட்ட இடத்தில் தான் நடைபெற்றது என்பதனை அரசு தரப்பு நிரூபிக்காததாலும், அ.சா.1 இன் சாட்சியத்தை உறுதியூட்டும் விதமாக கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும்


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.15 17:26:34 +0530

அ.சா.3 வழக்கு சம்பவம் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்ககாததாலும், இவ்வழக்கின் எதிரி தான் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டு அ.சா.1 விக்டோரியா அன்புவை பொது இடத்தில் வைத்து ஆபாசமான வார்த்தைகளால் பேசி அவருக்கு மிகுந்த அவமானத்தையும் மனஉளைச்சலையும் ஏற்படுத்தினார் என்ற எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 294(b) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் உரிய சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**இ.த.ச பிரிவு 506(i)**

**8.7.** அ.சா.1 அவருடைய சாட்சியத்தில், எதிரி அவரை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன், கடையை காலி செய்யாமல் விடமாட்டேன் என மிரட்டல் விடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். ஆனால், அந்த சாட்சியத்தை உறுதியூட்டும் வகையில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 வழக்கு சம்பவம் குறித்து எந்தவொரு சாட்சியமும் அளிக்கவில்லை. ஆகையால், இவ்வழக்கின் எதிரி தான் அ.சா.1 க்கு மிரட்டல் விடுத்தார் என்ற எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 506(i) இன் கீழான குற்றம் அரசு தரப்பில் உரிய சாட்சி மற்றும் சான்றாவணங்களின் மூலம் நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**8.8.** இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்ட சாட்சியங்களின் ஒட்டு மொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9. முடிவு:-**

**9.1.** முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 506(i) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**9.2.** இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி கு.வி.மு.ச பிரிவு 437-A இன் கீழ் எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் அந்த பிரிவில் கூறியுள்ளபடி 6 மாதங்கள் கழித்து தானாக ரத்தாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

9.3. இவ்வழக்கில் சொத்துப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டும், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டும், இன்று 15.06.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.15 17:26:39 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திருமதி. விக்டோரியா அன்பு | நிகழ்நிலை புகார்தாரர் |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | திரு. மகேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. ராமன் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு. மாயாண்டி | பார்வைமகஜர் சாட்சி |
| அ.சா.5 | திரு. துரை | புலன்விசாரணை அதிகாரி |

**2. <u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | நிரூபணம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 02.02.2018 | புகார்மனு | அ.சா.1 இன் மூலமாக |
| அ.சா.ஆ.2 | 02.02.2018 | பார்வைமகஜரிலுள்ள அ.சா.4 இன் கையெழுத்து மட்டும் | அ.சா.4 இன் மூலமாக |
| அ.சா.ஆ.3 | 02.02.2018 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 இன் மூலமாக |
| அ.சா.ஆ.4 | 02.02.2018 | பார்வைமகஜர் | அ.சா.5 இன் மூலமாக |
| அ.சா.ஆ.5 | 02.02.2018 | மாதிரி வரைபடம் | அ.சா.5 இன் மூலமாக |

**<u>3. அரசு தரப்பு சான்று பொருள்</u> :-**இல்லை
**<u>4. எதிரி தரப்பு சாட்சிகள்</u> :-** இல்லை
**<u>5. எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> :-** இல்லை
**<u>6. எதிரி தரப்பு சான்று பொருட்கள்</u> :-** இல்லை

**<u>Case Summary</u>**

**1.** எதிரி சிறையில் இருந்த நாட்கள் **:-**

| | |
|---|---|
| 02.02.2018 ஆம் தேதி முதல் 13.02.2018 ஆம் தேதி வரை | மொத்தம் 11 நாட்கள் |

**2.** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் - 27.04.2018
**3.** எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் - 20.08.2024
**4.** எதிரி மீதான குற்றச்சாட்டு விளக்கி கேட்ட நாள் - 20.08.2024
**5.** இடைக்கால மனு விபரம் **:**

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 72(2) இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு சி.ஆர்.எம்.பி.எண்.3774/2024 அனுமதிக்கப்பட்டுள்ளது.

**6.** எதிரி தலைமறைவாக இருந்த விவரம் **:**

| | |
|---|---|
| 06.06.2024 ஆம் தேதி முதல் 08.08.2024 ஆம் தேதி வரை | மொத்தம் 63 நாட்கள் |

**7.** மாண்பமை மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் - இல்லை

DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.15 17:26:46 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**<u>குறிப்பு</u> :-**
**1.** விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.